International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

முத்தொள்ளாயிரத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு: எம். எல். தங்கப்பாவின் மொழிபெயர்ப்பும் ஏ. ஆர். வெங்கடாசலபதியின் அறிமுகவுரையும்

அ. ரஞ்சினி
முனைவர்பட்ட ஆய்வாளர்
முனைவர் ப. பத்மினி
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை, இராணி மேரி கல்லூரி, சென்னை - 600 004.

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் வாழ்வியல், பண்பாடு, அரசியல், காதல் உணர்வு, வீரம், கொடை ஆகியவற்றைப் பன்முகமாக வெளிப்படுத்தும் அரிய இலக்கியக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. இவ்விலக்கிய மரபில் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களின் சிறப்புகளையும், அவர்களின் ஆட்சிச் சூழலையும், மக்களின் உணர்வுகளையும் எடுத்துரைக்கும் தனித்துவமான நூலாக முத்தொள்ளாயிரம் விளங்குகிறது. இந்நூலின் முழுமையான பாடல் தொகுப்பு இன்று கிடைக்காத நிலையில், எஞ்சியுள்ள பாடல்கள் அதன் இலக்கியச் செழுமையையும் வரலாற்று முக்கியத்துவத்தையும் உணர்த்துகின்றன.

முத்தொள்ளாயிரம் தொடர்பான பாடல் எண்ணிக்கை, காலம், ஆசிரியர், தொகுப்பு மரபு ஆகியவை ஆய்வுலகில் தொடர்ந்து விவாதிக்கப்படும் பொருண்மைகளாக உள்ளன. இந்நூலில் இடம்பெறும் அரசர் புகழ்ச்சி, வீரச்செயல்கள், நகரச் சிறப்புகள், காதல் உணர்வுகள் ஆகியவை பண்டைத் தமிழரின் இலக்கியக் கற்பனையையும் சமூகப் பார்வையையும் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, அகப்பொருள் மற்றும் புறப்பொருள் சார்ந்த கூறுகள் இந்நூலில் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை ஆராய்வது, இதன் இலக்கியத் தனித்துவத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

முத்தொள்ளாயிரத்தை ஆங்கில மொழியில் அறிமுகப்படுத்திய முக்கியமான முயற்சிகளில் எம். எல். தங்கப்பாவின் Red Lilies and Frightened Birds: Muttollayiram என்ற மொழிபெயர்ப்பு நூல் குறிப்பிடத்தக்கது. இந்நூலுக்கு ஏ.ஆர்.வெங்கடாசலபதி வழங்கியுள்ள அறிமுக உரை, முத்தொள்ளாயிரத்தின் இலக்கியப் பின்னணி, வரலாற்றுச் செய்திகள் மற்றும் ஆய்வுச்சிக்கல்களைப் புரிந்துகொள்வதற்கான அடிப்படையை வழங்குகிறது. இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள், தமிழ் இலக்கியத்தின் செவ்வியல் மரபுகளைப் பிறமொழி வாசகர்களிடம் கொண்டு சேர்ப்பதோடு, ஒப்பீட்டு இலக்கியம் மற்றும் மொழிபெயர்ப்பியல் ஆய்வுகளுக்கும் வாய்ப்புகளை உருவாக்குகின்றன.

இக்கட்டுரை, எம்.எல்.தங்கப்பாவின் முத்தொள்ளாயிரம் ஆங்கில மொழிபெயர்ப்பையும் அதற்கான அறிமுக உரையையும் மையமாகக் கொண்டு, நூலின் இலக்கியச் சிறப்புகள், மூவேந்தர் மரபு, அகப்பொருள்–புறப்பொருள் தொடர்பு, மொழிபெயர்ப்பின் தன்மைகள்

ஆகியவற்றை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், நூலின் காலம், பாடல் எண்ணிக்கை, வரலாற்றுப் பின்னணி தொடர் பான கருத்துகளைப் பொருத்தமான இலக்கிய மற்றும் ஆய்வு ஆதாரங்களுடன் மதிப்பிடு வதன் மூலம், முத்தொள்ளாயிரத்தின் இலக்கியப் பங்களிப்பையும் தங்கப்பாவின் மொழிபெயர்ப்பு முயற்சியின் முக்கியத்து வத்தையும் தெளிவுபடுத்த முயல்கிறது.

இதன் வழியாக, முத்தொள்ளாயிரம் குறித்த மேலாய்வுகளுக்கும், பண்டைத் தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளில் அறிமுகப்படுத்தும் மொழிபெயர்ப்பு முயற்சி களுக்கும் இக்கட்டுரை பயனுள்ள தொடக்க மாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதன்மைச் சொற்கள்: முத்தொள்ளாயிரம், எம்.எல்.தங்கப்பா, ஆங்கில மொழிபெயர்ப்பு, மூவேந்தர்கள், சங்க இலக்கியம், அகப் பொருள், புறப்பொருள், கைக்கிளை, மொழி பெயர்ப்பியல், தமிழ் இலக்கிய வரலாறு.

எம்.எல்.தங்கப்பாவின் முத்தொள்ளாயிரம் என்ற நூலானது ஆங்கில மொழிபெயர்ப்பாக பெங்குயின் பதிப்பகத்தின் தொல்லியல் நூல் வரிசையில் முதல் பதிப்பாக 2011இல் வெளியான “Red lilies And Frightence Birds” (சிகப்பு அல்லியும் பயந்துபோன பறவைகளும்) என்று தலைப்பிட்டு வெங்கடாசலபதியின் ‘சமூக பண்பாட்டு வரலாற்று ஆளுமையுடன்’ கூடிய அறிமுக குறிப்புகளுடன் வெளிவந்துள்ளது.

முத்தொள்ளாயிரம் சங்க இலக்கிய நூல்களில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பொக்கிஷமாக அல்லது சிறப்புத் தொகுப் பாகக் கருதப்படுகிறது. புரத்திரட்டில் 2700 பாடல்கள் உள்ளதென்று கூறப்படுகிறது. இப்புரத்திரட்டிலிருந்து திரட்டப்பட்ட பாடல் களின் தொகுப்புதான் முத்தொள்ளாயிரம் என்று கருதப்படுகிறது. இப்புரத்திரட்டிலுள்ள 2700 பாடல்களிலிருந்து நமக்குக் கிடைப்பவை 130 பாடல்கள் என்று கூறப்படுகிறது. இவ்வாறு இருப்பின் முத்தொள்ளாயிரம் என்பது மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் குறித்தும் ஒவ்வொருக்கும் தனித்தனியாக 900 பாடல்கள் வீதமாக பாடப்பட்ட தொகுப்பாகக் குறிப்பிடப்படுகிறது. இம்முத்தொள்ளாயிரம் ஒரே புலவரால் எழுதப் பட்டது என்றும் கூறப்படுகிறது. மேலும், இப்புலவரின் பெயரும் காலமும் தெரிய வில்லை என்பதாகவும் கருதப்படுகிறது. ஆக, முத்தொள்ளாயிரத்தின் காலத்தைப் பற்றியும் தெளிவான குறிப்புகள் இல்லை யென்ற வாதமும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

முத்தொள்ளாயிரம் ஆங்கில மொழி பெயர்ப்பாக வந்த மேலே குறிப்பிட்ட “Red lilies And Frighttened Birds” என்ற நூலுக்கு அறிமுக உரை எழுதிய வெங்கடாசலபதி யின் முத்தொள்ளாயிரம் பற்றிய வரலாற்றுப் பின்புலத்தையும் முத்தொள்ளாயிரத்தின் கருப்பொருள்கள் பற்றியும் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் பற்றிய குறிப்பும் ஒரு ஆழமான இலக்கிய வரலாற்று ஆய்வு சார்ந்த தரவுகளை கொடுத்துள்ளார். மேலும், ஆங்கில மொழி பெயர்ப்பாளரான எம்.எல். தங்கப்பா அவர்களைப் பற்றியும் சிறப்பான அறிமுகத்தைப் பதிவு செய்துள்ளார். இந்தக் கட்டுரையை வெங்கடாசலபதி எழுதிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூலுக்கான அறிமுகத் தெளிவுரையாகக் கட்டமைத்துள்ளேன்.

இந்தக் கட்டுரையின் தமிழ் அறிமுகத் தெளிவுரையின் நோக்கம் அல்லது அவசியம் என்னவென்றால் அ) தொல்லியல் தமிழ் இலக்கியத்தில் ஒரு முக்கியத் தொகுப்பாக பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அறிமுகம் பெற்றிருந்தாலும் முத்தொள்ளாயிரத்தை பற்றிய விளக்கங்களும், விவாதங்களும், ஆய்வுகளும் குறைவாகவேக் காணப்படுகிறது. ஆ) எம்.எல்.தங்கப்பாவின் ஆங்கில மொழி யாக்கம் வெங்கடாசலபதியின் செரிவான அறிமுகத்துடன் 2011இல் வெளிவந்த இந்நூலைப் பற்றி தமிழ் இலக்கியம் சார்ந்த ஆய்வாளர்கள், அறிஞர்கள், தொல்லியல் இலக்கிய ஆர்வலர், மாணவர்கள், சமூக இலக்கிய ஆய்வாளர்கள் மற்றும் பொது சமூகத் தளத்தில் பெரிதாக விவாதிக்கப் படவில்லை. எனவே, இக்கட்டுரை ஒரு பரந்தப் பொது அறிவுத்தளத்தில் அல்லது சமூகத்தளத்தில் ஒரு விவாதத்திற்கும், புரிதலுக்கும் ஒரு அடிப்படைத் துவக்கமாக அமையுமென்று நம்புகிறேன்.

வெங்கடாசலபதி தன்னுடைய அறிமுக உரையை பல தமிழ் இலக்கிய அறிஞர் களின் நூல்களைக் கொண்டும், தென்னிந்திய வரலாற்றுத் தரவுகளை பல முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று நூல்களிலிருந்தும் தமிழ் பண்பாட்டு வரலாற்றில் அவருடைய தனது ஆளுமையின் வாயிலாகவும் தனது அறிமுகத்தைக் கொண்டுள்ளார். தமிழ் தொல்லியல் இலக்கியத்தின் அறிவுப் பெட்டகமாக விளங்கும் திருக்குறள், சங்க இலக்கியம், தொல்காப்பியம் போன்ற மொழி பெயர்ப்பு மற்றும் தொகுப்பு இவைகளுடன் பழந்தமிழ் பாடல்களின் மொழிபெயர்ப்புத் தொகுப்பாக முத்தொள்ளாயிரம் செவ்வியல் இலக்கியத்திற்கு சிறப்புச் சேர்க்கிறது.

எம்.எல்.தங்கப்பாவின் மொழிபெயர்ப்பு தமிழ்ச் சமூக இலக்கிய மரபாக பழந்தமிழ்ப் பாடல்களின் மூலம் விளக்குகிறது. முத்தொள்ளாயிரம் ஒரு புதிய பழந்தமிழ் கலந்த கவிதை வடிவத்தையும், இலக்கிய வெளியையும் கொண்டு கட்டமைக்கப் பட்டுள்ளது. முத்தொள்ளாயிரம் எழுதப்பட்ட காலம் குறித்த விவாதம் ஒரு முடிவில்லா நிலைத்தன்மைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிடுகிறார். ஏனென்றால், சிலர் முத்தொள்ளாயிர இலக்கியத்தை 6ஆம் நூற்றாண்டு (கி.மு.) என்றும், 9ஆம் நூற்றாண்டு என்றும் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக, வையாபுரிப்பிள்ளை முத்தொள்ளா யிரத்தை வெறும் தொள்ளாயிரம் பாடல்கள் கொண்ட தொகுப்பு என்றும், அவை மூன்று வேந்தர்களைப் பற்றிய 300 பாடல்கள் வீதமாகக் கொண்ட தொகுப்பாக இரண்டு இலக்கண நூல்களின் வாயிலாக 'இலக்கண விளக்கப் பட்டியல்', 'பிரபந்த தீபிகை' என்ற நூல்களை மேற்கோள் காட்டி விளக்குகிறார். மேலும், தொள்ளாயிரம் பாடல்களில் 108 பாடல்கள் வாழ்த்து அல்லது வழிபாட்டு பாடல்களாகவே அமைந்துள்ளது என்று கூறுகிறார். சிலர் கடவுள் வாழ்த்து என்றும் சிலர் மன்னர்களைப் போற்றி வணங்குதல் போன்ற கருத்தை முன் வைக்கின்றனர். ஆனால், வெங்கடாசலபதி தன்னுடைய அறமுக உரையில் கடவுள் வாழ்த்து என்றோ, மன்னரை வாழ்த்துவது என்றோ, இயற்கையை வாழ்த்துவதென்றோ குறிப்பிட வில்லை. வெறுமனே வாழ்த்துப்பாடல் என்று மட்டும்தான் (Invocation) குறிப்பிடுகிறார். அதுவும் 15ஆம் நூற்றாண்டில் புறநானூறு தொகுப்பிலிருந்து அறியப்படுகிறது என்கிறார். இவைகளைத்தான் புரத்திரட்டு என்றும், இடைநிலைக் காலத் தமிழ் அறிஞர்களும், காலனியத்திற்கு முந்தைய தமிழ் அறிஞர் களும் இலக்கண நூல்களை மேற்கோள் காட்டி முத்தொள்ளாயிரத்தின் சிறப்பையும், தமிழ் இலக்கியப் பண்பாட்டிற்கும் உள்ளத் தொடர்புகளை விளக்கியுள்ளார்.

முத்தொள்ளாயிரம் என்பது பழந்தமிழ் பாடல் களின் கூட்டுத்தொகுப்பு அல்ல. மாறாக, ஒரு தனிப்புலவரால் அல்லது பழந்தமிழ் அறிஞரால் எழுதப்பட்ட ஒருங்கிணைப்பு படைப்பாகக் கருதப்படுகிறது. ஆனால், முத்தொள்ளாயிரத்தின் ஆசிரியர் பெயரோ அவர் சார்ந்த பின்புலமோ எழுத்து வடிவம் அல்லது வாய்மொழி மரபின் மூலமோ அவரின் அடையாளத்தை அறிந்து கொள்ள முடியாதவையாக உள்ளது. முத்தொள்ளா யிரம் பற்றியத் தரவுகளே 1905 வரை அறியப்படவில்லை. ர.ராகவையங்கார் எழுதிய புரத்திரட்டு மூலம்தான் தெரிய வந்துள்ளது. ஆனால், முத்தொள்ளாயிரம் பற்றிய தெளி வும், சிறப்பும், புரிதலும், கவித்துவத்தையும் வெளி உலகுக்கு பெருமளவில் எடுத்து ரைத்தப் பெருமை கூ.மு. சிதம்பரநாதர் முதலியார் அவர்களையேச் சாரும். முத்தொள்ளாயிரத்தின் கவித்துவம், அதன் சிறப்புத் தன்மைக்குச் சான்றாகக் கூற வேண்டுமென்றால், முத்தொள்ளாயிரம் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டவையே எனலாம். அவையாவன முத்தொள்ளாயிரத்தை ஆங்கிலத்தில் இதற்கு முன்பே, மொழிப்பெயர்ப்பு செய்தவர்கள் அப்புசாமி (1977), சுப்ரமணியன் (1984), சமஸ்கிருதத்தில் சுப்ரமணியன் (1993), இந்தியில் சுப்ரமணியன் (1996) ஜெர்மன் உல்ரிக்கே நிக்லாஸ் (Ulrike Niklas) (1987) இவற்றை வெங்கடாசலபதி தன் அறிமுக உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், எந்தெந்த காரணங்களுக்காக முழுமை பெறாத நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்ட முத்தொள்ளாயிரம் தமிழ் வாசகர் மற்றும் அறிஞர்களை கவர்வதற்கான காரணமும் மற்றும் புதிய

மொழிபெயர்ப்புக்கான ஆர்வமும் எதுவாக இருக்கக் கூடும்? முத்தொள்ளாயிரத்தின் மைய நீரோட்டத்தையும் அதன் பின்புலக் காரணிகளையும் சங்க இலக்கிய ஆர்வலர் களால் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். சங்க இலக்கியத்தின் மைய நீரோட்ட கருப்பொருள்களாகத் திகழ்வது அகம், புறம் என்பன முத்தொள்ளாயிரத்தில் கலந்தாற் போல் பாடல்கள் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. சங்க இலக்கியத்தைப் போன்றே நூற்றாண்டு களில் கிடைக்கப்பெற்ற பழமையான தமிழ் இலக்கியப் பொக்கிஷம் முத்தொள்ளாயிரம். சேர, சோழ, பாண்டிய மன்னர்களை பற்றியும், சங்க இலக்கியத்தின் தொன்மம் பற்றியும் முத்தொள்ளாயிரத்தின் சிறப்புகள் இரண்டாவது மற்றும் பதிமூன்றாவது அசோகர் கால கல்வெட்டுகள் குறிக்கின்றன என்று ஹ.சு. வெங்கடாசலபதி விளக்குகிறார்.

மேலும், பழங்கால இலக்கியம், கல்வெட்டு, தொல்லியல் ஆவணம் போன்றவற்றில் சமூகத்தில் அரசமைப்பு இருந்ததற்கான குறிப்புகள் ஏதுமில்லையென்ற தகவலை கேசவன் வேலுத்தா எனும் வரலாற்று ஆசிரியரின் நூலை மேற்கோள் காட்டுகிறார். இருப்பினும், கா.சிவத்தம்பியின் பழந்தமிழ் சமூகத்தைப் பற்றிய ஆய்வை மேற்கோளிட்டு வேந்தர் என்ற குறியீடு அரசைக் குறிப்பதாகவும், சிற்றரசர்கள் மற்றும் இனக் குழுத்தலைவர்கள் வேறுபட்டிருந்ததாகக் குறிப்பிடுகிறார். வேந்து அல்லது வேந்தர் என நம் நினைவுக்கு வருவது என்ன வென்றால், மிக பலம் பொருந்திய இராணுவப் படையுடைய வீரம் கொண்ட ஆட்சியாளர் / அரசர்களைக் கொண்டதே பழந்தமிழகம். இக்கூற்றையே கைலாசபதி இவ்வாறு குறிப்பிடுகிறார். மூவேந்தர் என்பது சங்க இலக்கியத் தொகுப்புகளில் மூன்று மன்னர்களின் தனிச் சிறப்புகளைக் குறிப்பவையே ஆகும். இதன் பொருள் முடிசூடிய மன்னர்கள் மற்றும் இம்மன்னர் களுக்குப் பின்னால் சிறப்பு வாய்ந்த இலக்கியங்கள், மரபுகள், பழந்தமிழகத்தில் மிகப் பொதுவாகக் காணப்பட்டது.

சங்க இலக்கியத்தில் நானூறு பாடல்களைக் கொண்ட புறநானூறு, நூற்றுமுப்பத்தியெட்டு பாடல்கள் கொண்ட பழந்தமிழ் வேந்தர் களாகிய சேர, சோழ, பாண்டியர்களின் சிறப்பு களை கூறுபவையாகவுள்ளன. இதனையே முத்தொள்ளாயிரம் வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடுகிறது. அவையாவன பாண்டியனின் (வேறுபெயர்கள்) மகடும்கோன், மாறன், கூடல் கோமான், தென்னன், செழியன், வழுதி, சோழனை, வல்லவன், (வேறு பெயர்கள்) செம்பியன், கிள்ளி; மற்றும் சேரனை:கோதை,வாஞ்சிக்கோ,மாந்தைக்கோ, வனவன் ஆகும். முத்தொள்ளாயிரத்தில் மூன்று அரசர்களின் பெயரிட்டுக் குறிப்பிடப்பட வில்லை. மாறாக, அவர்களின் தலைமுறைக ளையும் அது தொடர்பான பெயர்களைத் தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது முத்தொள்ளா யிரத்தில் மரபு சார்ந்த மூன்று அரசுகளையும் சேர்க்கையாக ஒன்றுபட்ட தமிழகமாக உருவகிக்கப்பட்டது. இது போன்ற உருவகம் அல்லது கற்பனையை புறநானூற்றிலிருந்து நம்மால் குறிப்பிட முடியும். மூன்று அரசர் களின் இடையிலும் தொடர்ச்சியாக பகைமை வெளிப்பாட்டின் காரணங்களினாலே அக்காலப் புலவர்களின் சிந்தனையில் அல்லது அவர்களின் விருப்பமாக ஒன்றுபட்ட தமிழகம் கற்பனை செய்யப்பட்டது. இதற்கு உதாரணமாக சிலப்பதிகாரத்தில் மூவேந்தர் களின் தலைநகர்களாக விளங்கிய (பூம்) புகார், மதுரை, வஞ்சி போன்றவைகளை தொடர்புபடுத்தியிருக்கிறார். இதுபோலவே முத்தொள்ளாயிரத்திலும் மூன்று வேந்தர் களையும் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்ற சொற்களைக் காணமுடிகிறது. அது சேரனை யும், சோழனையும், பாண்டியனையும் தமிழர், தமிழர்ப் பெருமான் என்பதாகும்.

சங்க இலக்கியத்தின் தொடர்புகளை தனித் தனி வேந்தர்களின் நாடு, நகரம், போர்த் திறம், படைவலிமை, மன்னனின் போர்வீரம், குதிரைப்படை, யானைப்படை, போர்க் கருவி களை திறம்பட பயன்படுத்துதல், எதிர் நாட்டவரை அழித்தல் போன்றவைகளே புறநானூற்றின் மைய நீரோட்டமாகவே சொல்லப்பட்டது. இதைப்போலவேதான் முத்தொள்ளாயிரத்திலுள்ள தன்மைகளை, கூறுகளை கவிநயத்துடன் மிகைப்படுத்திக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தொல்காப்பியத்திலும் படை, கொடி, முரசு,

யானை, ரதம், மகுடம் என்று இலக்கண வடிவில் குறிப்பிடப் பட்டுள்ளன. முத்தொள்ளாயிரத்திலுள்ள பாடல்களில் மூன்றில் ஒரு பங்கு பாடல்கள் மன்னர்கள் மீதும், இளவரசர்கள் மீதும், சாதாரணப் பெண்கள் ஒருதலை பட்சமாகக் காதல் கொண்டுள்ளனர். இப்பெயர்கள் (கைக்கிளை) ஒருதலையாகக் காதல் வயப்படுவதால் பசலை நோய்பட்டு அவர்களின் உடல் நலிந்து வளையல்கள் கழண்டு விழுகின்ற தாகையால், ஒருதலையாகக் காதல் வயப் படும் பெண்களின் தாய்மார்கள் மன்னர்கள் / இளவரசர்கள் வீதி உலா வரும் பொழுது இப்பெண்களை வெளியே வரவிடாமல் கதவை தாழிட்டுக் கொள்வதாகக் கூறப்படுகிறது. இதே கருப்பொருள் உடைய புறநானூற்றிலும் கவித்தன்மை வாய்ந்த பாடல்களில் இவ்விதமான புனைவுகள் காணப்படுவதை சங்க இலக்கிய அறிஞர் களால் எளிதாகப் புரிந்து கொள்ளமுடியும்.

தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றுப் பேராசிரியர் ஹ.சு. வெங்கடாசலபதி தென்னிந்திய சமூக வரலாற்றுப் பேராசிரியர் கேசவன் வேலுத்தாவின் தமிழ் இலக்கியம் சார்ந்த வரலாற்றுக் குறிப்பு-சங்க இலக்கியப் பாடல்களும் முத்தொள்ளாயிரப் பாடல்களும் மன்னர்களைப் பற்றியும், நாட்டைப் பற்றியும், பண்பாட்டுச் சூழல் பற்றியும் மிகைப் படுத்தப்பட்டு சுயபிம்ப உருவாக்கம் மற்றும் வைசிய அடையாளத்தை கட்டமைத்து சக்ரவர்த்தியின் தகுதியை முன்னிருத்தி வட இந்திய தேச ஒருமைத் தன்மையை கொண்டது என்று கூறிய கூற்றை பல்வேறு ஆதாரங்களுடன் குறிப்பாக, முத்தொள்ளா யிரத்திலிருந்து குறிப்பிட்டு அதனை வேறுபடுத்தி விளக்குகிறார்.

முத்தொள்ளாயிரத்தின் மேல் தொடர்ந்துள்ள ஈர்ப்புக்கான காரணம் என்னவாக இருக்கக் கூடும். அவை என்னவென்றால், முதல் காரணம் முத்தொள்ளாயிரப் பாடல்கள் வெண்பா இலக்கணமரபில் எழுதப்பட்டவை. செய்யுள் மரபுகளிலேயே சிறப்பான மரபு வெண்பாமரபு. இரண்டாவது காரணம்: அகப் பொருள், புறப்பொருள் இரண்டும் ஒன்று சேர கலந்து எழுதப்பட்ட பாடல்களின் கலவைத் தொகுப்பாகவுள்ளது. இந்த அகம், புறம் சேர்ந்த கலவையென்பது முதல் முறையாக புதிய முறையானது கையாளப் பட்டிருப்பதாகக் கூறுகிறார். மேலும், தொல்காப்பிய இலக்கண முறைப்படி அகம், புறம் என்ற இரண்டையும் தனித்தனியாக வேறுபடுத்தித் தொகுக்கப்பட்டவை. தொல்காப்பிய மரபுப்படி அகம் என்பது காதல், ஆண்-பெண் உறவு பற்றிக் குறிப்பிடுவது. புறம் என்பது வீரம், கொடை, ஈகை போன்ற பண்பு நலன்களை பற்றிக் குறிப்பிடுகிறது. முத்தொள்ளாயிரம் அகம், புறம் இரண்டையும் கலந்தவையாகக் குறிப்பிடப்படுவதால் தனிச்சிறப்பைப் பெற்றிருக்கிறது. தமிழ்ப் புவி பரப்பில் எழுதப்பட்ட பாடல்களாக தொல்காப்பியத் தில் காட்டப்பட்டிருக்கிறது.

"சங்க இலக்கியம் குறிப்பிடும் திணை மரபு என்பது தமிழகத்தின் புவியியற் பிரதேசங் களின் அல்லது பூ பொதிகப் பிரதேசங்களின் அடிப்படையில் ஆண்-பெண் பாலாரிடையே நிலவிய காதல் உறவின் வெவ்வேறு நிலைகளை முக்கியப்படுத்திக் கூறுகின்றது. இது அகம் எனப்பட்டது." (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டையத் தமிழ்ச் சமூகம், முதற் பதிப்பு 2003, ப. 68)

ஆனால், முத்தொள்ளாயிரத்தில் அகம், புறம் என்ற வேறுபாடில்லை. மேலும், திணை மரபான சங்க கால நிலப்பரப்பு வேறுபாடு இல்லை. மாறாக, ஆண்-பெண் உறவு என்பது கைக்கிளையாகவேக் காணப் படுவதாகக் குறிப்பிட்டுச் செல்கிறார்.

எம்.எல்.தங்கப்பாவின் மொழிபெயர்ப்பு குறித்து - தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மூன்றாவது மொழிபெயர்ப்பை எம்.எல். தங்கப்பா அவர்கள் செய்துள்ளார் எனவும், இவரின் மொழி பெயர்ப்பு குறித்து ஹ.சு. வெங்கடாசலபதி, இந்திரா பார்த்தசாரதி மற்றும் புகழ் பெற்ற தமிழ் - ஆங்கிலம் மற்றும் பிற முத்தொள்ளாயிரத்தின் நூல் விமர்சனங்களில் மொழிபெயர்ப்பு சிறப்பைப் பற்றி செறிவுடன் பாராட்டியுள்ளனர். அவர்கள் பாராட்டுகளுடன் அவர்கள் குறிப்பிட்ட காரணிகள் என்னவென்றால் எம்.எல். தங்கப்பாவின் பின்புலமான தமிழ் இலக்கியப் புலமையும், தமிழ் மீது வைத்திருக்கின்ற அளப்பறிய அக்கறையும் பற்றிக் குறிப்பிட்டு

உள்ளனர். மேலும், எம்.எல். தங்கப்பாவின் தமிழ்மொழியில் அவருக்கிருந்த ஆளுமையும், ஆங்கில மொழியில் அவருக்கிருந்த ஆளுமையும் ஒரு சேர முத்தொள்ளாயிர மொழி பெயர்ப்பில் வெளிப்படுவதாகப் பாராட்டியுள்ளனர். குறிப்பாக ஹ.சு. வெங்கடாசலபதி தங்கப்பாவின் ஆங்கில ஆசிரியர் - ஆங்கிலேயரே ஆங்கிலம் கற்றுக் கொடுத்ததை மிகமுக்கியமான காரணமாகக் குறிப்பிடுகிறார்.

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழி பெயர்க்கும் போது அந்த மொழியின் மரபு, பண்பாடு, கலாச்சாரங்களுக்கு ஏற்ப பொருள், பாடல்களின் படிமம் மற்றும் ரசனை மாறாமல் மொழிபெயர்ப்பதே ஆகும். இந்த அடிப்படை மொழி பெயர்ப்பு தத்துவம் அல்லது மரபு சிறிதளவும் பிசகாமல் எம்.எல். தங்கப்பா அவர்கள் முத்தொள்ளாயிர மொழி பெயர்ப்புப் பணியை மிகச் செவ்வனே செய்துள்ளார் என்று குறிப்பிடுகிறார்கள்.

முடிவுரை

முத்தொள்ளாயிரம் பண்டைத் தமிழ் இலக்கிய மரபில் மூவேந்தர்களின் அரசியல், வீரம், கொடை, நகரச் சிறப்பு மற்றும் காதல் உணர்வுகளை ஒருங்கிணைத்துக் காட்டும் தனித்துவமான இலக்கியத் தொகுப்பாக விளங்குகிறது. நூலின் முழுமையான மூல வடிவம் இன்று கிடைக்காத நிலையில், கிடைத்துள்ள பாடல்களும் அவற்றின் பதிப்பு வரலாறும் இந்நூலின் இலக்கியச் சிறப்பை ஆராய்வதற்கு அடிப்படையாக அமைகின்றன.

எம்.எல்.தங்கப்பாவின் Red Lilies and Frightened Birds: Muttollayiram என்ற ஆங்கில மொழிபெயர்ப்பு, முத்தொள்ளாயிரத்தை ஆங்கில வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் முக்கியமான முயற்சியாகும். ஏ.ஆர். வெங்கடாசலபதியின் அறிமுக உரை, நூலின் இலக்கிய மற்றும் வரலாற்றுப் பின்னணியைப் புரிந்துகொள்வதற்கான வழிகாட்டுதலை வழங்குகிறது. இருப்பினும், மொழிபெயர்ப்பின் தனித்துவத்தை நிறுவுவதற்கு மூலத் தமிழ்ப் பாடல்களையும் ஆங்கில மொழிபெயர்ப்பையும் ஒப்பிட்டு ஆராய்வது அவசியமாகிறது.

முத்தொள்ளாயிரத்தின் பாடல் எண்ணிக்கை, காலம், ஆசிரியர், அகப்பொருள்–புறப்பொருள் தொடர்பு மற்றும் மூவேந்தர்களின் வரலாற்றுப் பின்னணி ஆகியவை தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டிய கூறுகளாக உள்ளன. இக்கூறுகளை ஆராயும்போது, பதிப்பாசிரியர் களின் கருத்துகள், இலக்கண நூல்கள், இலக்கியச் சான்றுகள் மற்றும் கல்வெட்டு ஆதாரங்கள் ஆகியவற்றைத் தனித்தனியாக மதிப்பிட்டு, இலக்கியக் கற்பனையையும் வரலாற்று உண்மையையும் வேறுபடுத்திப் பார்ப்பது முக்கியமானதாகும்.

எனவே, முத்தொள்ளாயிரத்தின் இலக்கியச் சிறப்பையும் தங்கப்பாவின் மொழிபெயர்ப்புப் பங்களிப்பையும் முழுமையாக மதிப்பிடுவ தற்கு, பாடல் அடிப்படையிலான ஒப்பீட்டு ஆய்வு, நம்பகமான ஆதார மேற்கோள்கள் மற்றும் முந்தைய ஆய்வுகளின் விமர்சனப் பார்வை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இத்தகைய அணுகுமுறை முத்தொள்ளாயிரம் குறித்த மேலாய்வுக ளுக்கும், பண்டைத் தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளில் அறிமுகப்படுத்தும் மொழிபெயர்ப்பு முயற்சிகளுக்கும் பயனுள்ளதாக அமையும்.

நூற்பட்டியல்

- இராகவையங்கார், ரா., பதிப்பாசிரியர். முத்தொள்ளாயிரச் செய்யுட்கள். செந்தமிழ்ப் பிரசுரம், மதுரைத் தமிழ்ச் சங்கம், 1905.
- இராகவையங்கார், ரா., பதிப்பாசிரியர். முத்தொள்ளாயிரச் செய்யுட்கள். செந்தமிழ்ப் பிரசுரம், மதுரைத் தமிழ்ச் சங்கம், 1935.
- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம். "முத்தொள்ளாயிரம்." செம்மொழித் தமிழ் மின் நூலகம்.
- பாண்டியன், பி., பதிப்பாசிரியர். முத்தொள்ளாயிரம் ஆங்கில மொழிபெயர்ப்புகள். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, 2010.
- Thangappa, M. L., Translator. Red Lilies and Frightened Birds: Muttollayiram. Edited by A. R. Venkatachalapathy, Penguin Books India, 2011.